# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

முறையீட்டு மனு எண்: 175/2015/பே

ஆணை எண்: 065/2017

நாள்: 13/04/2017

1. திரு. K. விஸ்வநாதன்,
   பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர்,
   திருமுருகன் பூண்டி பேரூராட்சி,
   திருமுருகன் பூண்டி.

2. திரு. ஆர். பழனிச்சாமி,
   13வது வார்டு கவுன்சிலர்,
   திருமுருகன்பூண்டி பேரூராட்சி,
   இராக்கியபாளையம், திருப்பூர் - 641 654.

3. திரு. K. மோகன்குமார்,
   5வது வார்டு முன்னாள் செயலாளர்,
   82, துரைசாமி நகர்,
   திருமுருகன் பூண்டி பேரூராட்சி. - முறையீட்டு மனுதாரர்கள்

செயல் அலுவலர்,
திருமுருகன் பூண்டி பேரூராட்சி,
இராக்கியபாளையம், திருப்பூர்–641 654. - எதிர் மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், திருமுருகன் பூண்டி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. K. விஸ்வநாதன் என்பவரின் 06.08.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 175/2015 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

1. திருப்பூர் மாவட்டம், திருமுருகன் பூண்டி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. K. விஸ்வநாதன் என்பவர் 06.08.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் அடியில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்களை தெரிவித்துள்ளார்:-

அரசு அனுமதி இல்லாமல் பேரூராட்சி பகுதியில் உள்ள வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் டெபாசிட் கட்டணம் ஏதும் வசூல் செய்யாமல், அனுமதியில்லாத மனை பிரிவுகளான சொர்ணபுரி ரிச் லேண்ட், அனுக்கிரகா ஆகிய குடியிருப்புகளுக்கும் பேரூராட்சியில் உள்ள வீடுகளுக்கும் வீட்டுவரி இரசீது போடாமல் 1000 இணைப்புகளுக்கு இணைப்பு ஒன்றுக்கு ரூ.30,000/- முதல் ரூ.50,000/- வரை பெற்றுக் கொண்டு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும் அப்பகுதியில், புரமோட்டர்கள் அவர்களே பிளம்பர் வைத்து அவர்களாகவே குடிநீர் இணைப்புகள் வழங்கி உள்ளனர் என்றும், பேரூராட்சி திட்ட நலப் பணிகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள ஒப்பந்த புள்ளி தொகைக்கு மேல் 4.98% கூடுதலாக நிர்ணயம் செய்து பணி ஆணை வழங்குவதால் பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுகிறது என்றும், ஏழை எளிய மக்களிடம் ரூ.20,000/- முதல் ரூ.30,000/- வரை லஞ்சமாக பெற்றுக்கொண்டு வீட்டுவரி இரசீது போடப்படுகிறது என்றும் இதனால் பேரூராட்சிக்கு குடிநீர் இணைப்பு டெப்பாசிட் கட்டணம் குடிநீர் மாத கட்டணம், செண்டேஜ் கட்டணம் மற்றும் டெண்டர் பணிகளுக்கு 4.98 சதவீதம் கூடுதலாக நிர்ணயிப்பது ஆகிய இனங்களின் மூலம் அதிக இழப்புகள் ஏற்படுகிறது என முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2. மேற்படி முறையீட்டு மனு சம்பந்தமாக 11.08.2015 மற்றும் 09.03.2016 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணைகளின் எண்.175/2015-1ன் வாயிலாக செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள் கோரப்பட்டன. அதன்படி, செயல் அலுவலரின் ந.க.எண்.627/2015 நாள்: 18.12.2015லும் மற்றும் ந.க.எண்.627/2015 நாள்:22.03.2016லும் பெறப்பட்ட விளக்க அறிக்கையில் செயல் அலுவலர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

"திருமுருகன்பூண்டி பேரூராட்சியில் திருப்பூர் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் குடிநீர் பெறப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள சொர்ணபுரி, ரிச்லேண்ட் பகுதி வார்டு எண்.13ல் அமைந்துள்ளது. இக்குடியிருப்பு பகுதி சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் அமைய பெற்ற குடியிருப்பு பகுதியில் 210 குடியிருப்புகளுக்கு வரிவிதிப்புகள் செய்யப்பட்டுள்ளது. இக்குடியிருப்பு நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாகும். அனுகிரகா குடியிருப்பு பகுதி வார்டு எண்.13-ல் அமைந்துள்ளது. இக்குடியிருப்பு பகுதியில் 51

வீடுகளுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. இம்மனைப் பிரிவு நகர் ஊரமைப்புத்துறையினரால் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாகும். மேற்படி பகுதி வீடுகளுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்ட வீடுகளுக்கு முறையாக டெபாசிட், சென்டேஜ் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு, சொர்ணபுரி ரிச்லேண்ட் பகுதிகளில் 130 குடிநீர் குழாய்கள் இணைப்புகளும் அனுகிரகா குடியிருப்பு பகுதியில் 25 குடிநீர் குழாய் இணைப்புகளும் பேரூராட்சி மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளில் கட்டணங்கள் வசூலிக்கப்படாமல் குடிநீர் இணைப்புகள் ஏதும் பேரூராட்சி மூலம் வழங்கப்படவில்லை. மேலும் பேரூராட்சி அலுவலகத்திற்கு தெரியாமல் முறையற்ற முறையில் குடிநீர் குழாய் இணைப்பு குறித்து இதுவரை பொது மக்களிடமிருந்தும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளிடமிருந்தும், எந்தவொரு புகார் மனுவும் வரப்பெறவில்லை.

திருமுருகன்பூண்டி பேரூராட்சியில் எந்தவொரு திட்டப்பணிக்கும் பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு பின்னர் டெண்டர் வைக்கப்பட்டு டெண்டர் ஒப்புதலுக்காக மீண்டும் மன்றக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது. பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் பணிகள் எடுத்து செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு நகர்ப்புற உள்ளாட்சி பொறியியல் நடைமுறை நூல் பக்கம் எண்.9ல் பொதுமக்களின் அவசர அவசிய அத்தியாவசிய பணிகள் முதல் டெண்டரில் மதிப்பீட்டுத் தொகைக்கு 5% சதவீதம் வரை கூடுதலாக செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நடைமுறை நூலில் தெரிவித்துள்ளவாறும், ஒவ்வொரு டெண்டர் முடிந்த பிறகும் மன்றப் பொருளில் டெண்டர் சதவீதம் மன்றத் தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே வேலை உத்தரவு வழங்கி பணிகள் செய்து முடிக்கப்படுகிறது. பேரூராட்சி மன்றத்தால் மதிப்பீட்டுத் தொகைக்கு கூடுதல் சதவீதம் (5 சதவீதத்திற்குள்) அங்கீகரிக்கப்பட்ட போதிலும், பெரும்பான்மையான பணிகள் மதிப்பீட்டுத் தொகைக்குள்ளாகவே பட்டியல் தொகை வழங்கப்படுகிறது. ஒரு சில பணிகளுக்கு மட்டுமே மதிப்பீட்டுத்தொகைக்கு சிறிதளவு கூடுதலாக குறைவான கூடுதல் தொகைக்குப் பட்டியல் அங்கீகரிக்கப்படுகிறது. மேலும் அனைத்துப் பணிகளுக்கும் உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் அவர்களால் பட்டியல் தயாரிக்கப்பட்டு மேலொப்பம் செய்யப்பட்ட பின்னரே பட்டியல் அங்கீகரிக்கப்படுகிறது. மேற்படி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி பொறியியல் நடைமுறை நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும், மன்றத்தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறும்

பொறியியல் பிரிவில் தயாரிக்கப்பட்டு செய்து முடித்த வேலைக்கு மட்டும் பட்டியல் வழங்கப்பட்டுள்ளவாறும் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் தலைவர் திருமதி லதா சேகர் தலைவர் பதவி வகித்த 25.10.2011 முதல் 27.01.2012 வரையுள்ள காலத்தில் பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகையை விட 5 சதவீதத்திற்குள் கூடுதல் சதவீதத்திற்கு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனு வழங்கியுள்ள திரு. கே. விஸ்வநாதன் துணைத்தலைவர் (தலைவர் பொறுப்பு) பதவி வகித்த 06.02.2012 முதல் 23.07.2014 வரையுள்ள காலத்தில் பணிகளுக்கு மதிப்பீட்டு தொகையைவிட 5 சதவீதத்திற்குள் கூடுதல் சதவீதத்திற்கு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. புகார் மனு கொடுத்துள்ளவரே பணி மதிப்பீட்டு தொகைக்கு 5 சதவீதத்திற்குள் கூடுதல் சதவீதம் வழங்க மன்றத் தீர்மானத்தின் மூலம் அங்கீகரித்துள்ளார்.

திரு. ஆ. பழனிச்சாமி தற்போதைய தலைவர் 24.09.2014 முதல் நடப்பு தேதி வரையில் பணிகளுக்கு மதிப்பீட்டு தொகையை விட 5 சதவீதத்திற்குள்ளாக கூடுதல் சதவீதம் வழங்க மன்றத் தீர்மானத்தின் மூலம் அங்கீகரித்துள்ளார் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. மேலும்,

திருமுருகன்பூண்டி பேரூராட்சியில் 3வது வார்டில் 394 குடிநீர் குழாய் இணைப்புகளும், 5வது வார்டில் 761 குடிநீர் குழாய் இணைப்புகளும், 6வது வார்டு பகுதியில் 834 குடிநீர் குழாய் இணைப்புகளும் 7வது வார்டில் 530 குடிநீர் குழாய் இணைப்புகளும் 9வது வார்டில் 816 குடிநீர் குழாய் இணைப்புகளும் 10வது வார்டில் 708 குடிநீர் குழாய் இணைப்புகளும் 11வது வார்டில் 570 குடிநீர் குழாய் இணைப்புகளும் 13வது வார்டில் 679 குடிநீர் குழாய் இணைப்புகளும் டெபாசிட் பெற்று சென்டேஜ் தொகை வசூலிக்கப்பட்டு, குடிநீர்க் கட்டண கேட்பில் பதியப்பட்டு குடிநீர் கட்டணம் தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

திருமுருகன்பூண்டி பேரூராட்சியில் திரு. மோகன் குமார் தெரிவித்துள்ள 5வது வார்டு மகாலட்சுமி நகரில் 41 குடிநீர் குழாய் இணைப்புகளும் என்.எஸ்.பி. நகரில் 30 குடிநீர் குழாய் இணைப்புகளும் எவிபி நகரில் 83 குடிநீர் குழாய் இணைப்புகளும் எம்.ஜி.ஆர் நகரில் 72 குடிநீர் குழாய் இணைப்புகளும் விநாயகா கார்டனில் 25 குடிநீர் குழாய் இணைப்புகளும் தன்வர்சினி நகரில் 46 குடிநீர் குழாய் இணைப்புகளும் துரைசாமி நகரில் 464 குடிநீர் குழாய் இணைப்புகளும் ஏற்கனவே சென்டேஜ் கட்டணம் டெபாசிட் தொகை செலுத்தி மாதந்திர குடிநீர் கட்டணங்கள் பல ஆண்டுகளாக செலுத்தப்பட்டு வருகிறது.

திருமுருகன்பூண்டி பேரூராட்சியில் 13வது வார்டு உறுப்பினராக திரு. ஆ. பழனிச்சாமி என்பவர் உள்ளார். சொர்ணபுரி ரிச்லேண்டில் 130 குடிநீர் குழாய் இணைப்புகளும் அனுகிரகா கார்டன் பகுதியில் 25 குடிநீர் குழாய் இணைப்புகளும், சொர்ணபுரி ரிச் லேண்டில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் வீடுகளுக்கு, குடியிருப்புகளுக்கு வரைபட அனுமதி பேரூராட்சி மூலம் வழங்கப்படுவதில்லை. ஆனால் பேரூராட்சியின் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு வரைபட அனுமதிக்கு உண்டான அனைத்து கட்டணங்களும் வசூல் செய்யப்பட்டு வரிவதிப்பு மட்டும் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தப்படுகிறது.

3. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக, முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.175/TPT/2015 நாள்:28.09.2015 மற்றும் 29.10.2015ல் அழைப்பாணை அனுப்பப்பட்டு, 24.11.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது மனுதாரர் விஸ்வநாதன் அளித்த வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

"6.8.2015 நாளிட்ட புகார் மனு என்னால் அனுப்பப்பட்டது. விசாரணையின் பொழுது என்னுடைய வாக்குமூலமாக அதோடு அது சம்பந்தப்பட்ட ஆவணங்களும் இணைத்து சமர்ப்பித்துள்ளேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.

சொர்ணபுரி ரிச் லேண்ட் என்ற பகுதியில் அங்கீகாரமற்ற மனைகள் பிரிக்கப்பட்டு விற்பனை நடக்கின்றது. அந்த பகுதிகளில் விற்பனை முடிந்து வீடு கட்டியவுடன் குடிநீர் இணைப்பு பேரூராட்சிகளின் அதிகாரிகள் ஒப்புதலின்றி பேரூராட்சி அதிகாரிகளின் துணையோடு மனை விற்பவரும் அவரே குடிநீர் இணைப்பு வழங்கியுள்ளார்கள். இதற்காக அவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கையூட்டு பெறுகிறார்கள்.

இத்துடன் 5வது வார்டு செயலாளர் திரு. மோகன்குமார் அவர்கள் 24.11.2015 நாளிட்ட கடிதத்தையும் அதைபோல் 13வது வார்டு கவுன்சிலர் திரு. ஆர். பழனிச்சாமி அவர்களின் 24.11.2015 நாளிட்ட கடிதங்களையும் சமர்ப்பித்துள்ளேன். என்னுடைய எழுத்துப்பூர்வமான அறிக்கை திரு. கே. மோகன்குமார் மற்றும் திரு. ஆர். பழனிச்சாமி ஆகிய மூவரின் கடிதங்களையும் எழுத்துபூர்வ வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளு-மாறு கேட்டுக்கொள்கிறேன்."

மேலும், 13வது வார்டு கவுன்சிலர் R. பழனிச்சாமி இந்நேர்வு சம்பந்தமாக 24.11.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் அளித்த வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

"மேற்கண்ட விலாசத்தில் வசித்து வரும் நான் 13-வது வார்டு கவுன்சிலராக பணியாற்றி வருகிறேன். எனது வார்டு பகுதியில் பேரூராட்சியின் எவ்வித அனுமதி இன்றி சட்டவிரோதமாக புதியதாக குடிநீர் இணைப்புகள் பேரூராட்சி தலைவர் ஏ.பழனிச்சாமி, செயல் அலுவலர் நந்தகோபால், மு. தலைவர் லதா சேகர் [illegible]

கையூட்டு பெற்றுக்கொண்டு சொர்ணபுரி, ரிச்லேண்ட் அனுக்கிரகா கார்டன், மற்றும் சில பகுதிகளில் 100 பேர்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கியுள்ளனர். சொர்ணபுரி ரிச்லேண்டில் அப்ரூவல் இல்லாமல் கட்டப்படும் மனை பிரிவு வீடுகளுக்கு அவர்களே பிளம்பர் வைத்து குடிநீர் இணைப்புகள் வழங்கி உள்ளனர். தாங்கள் நேரில் ஆய்வுக்கு ஏற்பாடு செய்யும் பட்சத்தில் சட்டவிரோத குடிநீர் இணைப்பு பெற்ற வீடுகளை தெரியப்படுத்துவேன் என உறுதி கூறுகிறேன்."

5வது வார்டு கவுன்சிலர் K. மோகன்குமார் இந்நேர்வு சம்பந்தமாக 24.11.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் அளித்த வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

"திருமுருகன்பூண்டி பேரூராட்சிக்கு உட்பட்ட 5வது வார்டு பகுதியில் திமுகவைச் சேர்ந்த செந்தில் என்பவர் கவுன்சிலராக உள்ளார். அவர் பேரூராட்சி தலைவர் பழனிச்சாமி செயல் அலுவலர் நந்தகோபால் மு. தலைவர் லதா சேகர் ஆகியோர் கூட்டாக சேர்ந்து சட்ட விரோதமாக பேரூராட்சி அனுமதி இன்றி கையூட்டுப் பெற்றுக்கொண்டு 5வது வார்டு பகுதியான, மகாலட்சுமி நகர், N.S.P. நகர், AVP நகர் எம்ஜிஆர். நகர், விநாயகா கார்டன், தன்வர்சி நகர், துரைசாமி நகர் ஆகிய பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கியுள்ளனர். தாங்கள் மேற்கண்ட பகுதியில் நேரில் ஆய்விற்கு ஏற்பாடு செய்யும் பட்சத்தில் நான் சட்டவிரோத குடிநீர் இணைப்பு பெற்ற வீடுகளை தெரியப்படுத்துவேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் " என்று குறிப்பிட்டார்.

4. மேலும் முறையீட்டு மனு சம்பந்தமாக, முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 175/2015/பேரு நாள் 10.06.2016ன் வாயிலாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கை கோரப்பட்டு, பெறப்பட்ட அறிக்கை பரிசிலிக்கப்பட்டதில் அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகள் ஒதுக்கீடு தொடர்பான விவரங்கள் தெரிவிக்காததால் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இம்முறைமன்ற நடுவ அறிப்பாணை எண். 175/2015/பேரு நாள் 18.07.2016ன் வாயிலாக 16.08.2016 அன்று பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். 16.08.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகததால் மீண்டும் 01.09.2016 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

01.09.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின் போது அளித்த வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

"நான் 8.7.2015 முதல் ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக பணிபுரிகிறேன். உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திலிருந்து சில விபரங்கள் கேட்டு எனக்கு வந்த கடிதத்திற்கு என்னால் 8.7.2016-ல் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு பதில் அளித்துள்ளேன். 10.6.2016 அன்று நாளிட்ட கடிதம் முறைமன்ற நடுவத்திலிருந்து வந்தது. 22.06.2016 அன்று செயல் அலுவலர் திருமுருகன்பூண்டிக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். நான் என்னுடைய

அறிக்கையை நேரில் சென்று ஆய்வு செய்து எந்த குறிப்பையும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஏற்ற பதில் அளிக்க மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் " என்று குறிப்பிட்டார். அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

தொடர்ந்து ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது கடித ந.க.எண்.207/16/ப3/ 23.11.2016ல் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.-

"திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி பேரூராட்சியில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட வரைபட அனுமதி ஏதும் வழங்கப்படுவதில்லை. பேரூராட்சிக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்தும் நோக்கில் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவுகளுக்கும் அரசாணை (நிலை) எண்.161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்:14.11.2000ன் நிபந்தனைகளின்படி கட்டிட வரைபட அங்கீகாரம் வழங்காமல் அடிமனை நீங்கலாக மேற்கூரைக்கு மட்டும் வரி வசூலிக்கப்பட்டு வரிவிதிப்பு மட்டும் செய்யப்பட்டு, சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் அங்கீகாரம் ஏதும் செய்யப்படுவதில்லை. தனிநபர் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு மட்டுமே செய்யப்படுகிறது. மனைப்பிரிவு வரன்முறை மற்றும் அங்கீகாரம் வழங்குதல் நேர்வுகளில் மட்டுமே பொது ஒதுக்கீடு இடம் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்ற விபரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் பொது இடம் ஒதுக்கீடு குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கையில் தணிக்கைக் குறிப்பு ஏதும் செய்யப்படவில்லை என்ற விபரத்தினையும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக திருமுருகன்பூண்டி பேரூராட்சியில் 18.10.2016 தேதியன்றும் மீளவும் 18.11.2016 தேதியன்றும் தொடர் ஆய்வுகள் மேற்கொண்டதில் திரு. நந்தகோபால் செயல் அலுவலராக பொறுப்பேற்பதற்கு முன் குடிநீர் இணைப்புகளுக்கான வைப்புத் தொகைகள் பெறப்பட்டுவிட்டன. அவைகளுக்கு மட்டுமே இணைப்புகள் தனியரது பணிக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளதை கண்டறியப்பட்டது.

மேலும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு நேர்வுகளில் குறிப்பிட்டுச் சொல்லும் படியான தணிக்கை மறுப்புகள் 2011-12, 2012-13, மற்றும் 2013-14 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தணிக்கையில் சுட்டிக் காட்டப்படவில்லை. 2014-15 மற்றும் 2015-16 தணிக்கை இன்னும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

மேற்கூறிய நிலையில் பேரூராட்சி வார்டு எண்.13 சொர்ணபுரி ரிச்லேண்ட் அனுக்கிரகா கார்டன் பகுதிகளில் முறையாக டெபாசிட் மற்றும் குடிநீர் இணைப்புக் கட்டணம் பெறப்படுவதாகவும் பேரூராட்சி அனுமதியில்லாமல் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ள குடிநீர் இணைப்பு குறித்து புகார்கள் உண்மைக்கு புறம்பானவை என்று செயல் அலுவலர் அறிக்கை ந.க.எண்.627/2015/18.12.2015ன் வாயிலாக அறியப்படுகிறது.

பேரூராட்சியில் ஒப்பந்த வேலை ஒப்பந்ததாரர்கள் பொதுப்பணித் துறை சந்தை விலை விகிதம் குறைவாக இருப்பதாலும் வெளிமார்க்கெட்டின் விலை விகிதம் அதிகமாக இருப்பதால்

பேரூராட்சி ஒப்பந்த பணிகளில் மதிப்பீட்டை விட கூடுதலாக விலை விகிதம் கொடுக்கப்பட்டதை பேரூராட்சி மன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே வேலை உத்தரவு வழங்கப்படுவதாக அறியப்படுகிறது.

5. முறையீட்டு மனு, சாட்சியங்கள், தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டதில் திருப்பூர் மாவட்டம் திருமுருகன் பூண்டி பேரூராட்சியில், சொர்ணபுரி, ரிச்லேண்ட், அனுக்கிரகா கார்டன் பகுதிகளில் உரிய அங்கீகாரம் பெறாத நிலங்களில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட வரைபடம் அங்கீகாரம் வழங்காமல் மேற்கூரை வரிவிதிப்பு செய்யப்பட்டு சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது என்ற பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிக்கையில் உள்ளது. இவ்வாறு அங்கீகாரமற்ற மனைகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு மேற்கூரை வரிவிதிப்பு வசூலிக்கப்படுவது கட்டிய கட்டிடத்திற்கும் அங்கீகாரமற்ற மனைக்கும் மறைமுகமாக அனுமதி அளித்ததாகவே இம்முறைமன்றம் கருதுகிறது. மேலும், இது நகர்ப்புற மற்றும் ஊரக திட்ட சட்டங்களுக்கு எதிரானதாகவும், சட்டத்திற்கு புறம்பானதாகவும், சட்டமீறலை, ஒழுங்கீனங்களை போற்றி வளர்க்கும், சட்டத்திற்கு புறம்பான செயல் என்று இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

மேலே குறிப்பிட்ட அங்கீகாரமற்ற நிலையில் பொது இடம் ஒதுக்கீடு பெறப்படாதது, அவற்றின் பரப்பளவு வழிகாட்டி மதிப்பு ஆகியவற்றை கணக்கில் கொண்டு அங்கீகாரமற்ற மனைகளுக்கு வரி வதிப்பு செய்து வசூல் செய்யப்பட்டதால் பேரூராட்சிக்கு ஏற்பட்ட இழப்பை ஏற்படுத்திய சம்பந்தப்பட்ட பேரூராட்சி முந்தைய செயல் அலுவலர் திரு. நந்தகோபால் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சி இயக்குநர் அவர்களுக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்கின்றது.

2017–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 –ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஓம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்.

1. திரு. K. விஸ்வநாதன்,
   பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர்,
   திருமுருகன் பூண்டி பேரூராட்சி,
   திருமுருகன் பூண்டி.

2. திரு. K. மோகன்குமார்,
   5வது வார்டு முன்னாள் செயலாளர்,
   82, துரைசாமி நகர்,
   திருமுருகன் பூண்டி பேரூராட்சி.

3. செயல் அலுவலர்,
   திருமுருகன் பூண்டி பேரூராட்சி,
   இராக்கியபாளையம், திருப்பூர்–641 654.

4. பேரூராட்சிகளின் இயக்குநர்